## இலங்கை மத்திய வங்கி

2020 மாச்சு 31 நிதிக் குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள் 2020இன் 02ஆம் இலக்கம்

### திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் 34ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்ட 2012ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரைகளுக்குப் பின்வரும் திருத்தங்களை விடுக்கின்றார்.

இதற்கமைய, 2012ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் 1ஆம் பிரிவு பின்வருவனவற்றின் மூலம் பதிலீடு செய்யப்படுகிறது.

1. ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் எந்தவொரு வேலைநாளின் முடிவின் போதும் பங்குடமையாளர்களுக்கான பொறுப்புக்கள், பிணையமயப்படுத்தல்கள் மற்றும் சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட நீண்ட காலக் கடன்பாடுகள் (ஓராண்டிற்கும் மேற்பட்டவை) என்பன நீங்கலாக குறைந்தபட்சம் மொத்தப் பொறுப்புக்களிலும் ஐந்தொகைக்குப் புறம்பான விடயங்களிலும் 5 சதவீதத்திற்குக் குறையாததொரு தொகையினை திரவச் சொத்துக்களாகப் பேணிவருதல் வேண்டும்.
2. இப்பணிப்புரைகள், கொவிட்-19 தொற்றினை வெற்றி கொள்வதற்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, இப்பணிப்புரைகளின் திகதியிலிருந்து ஆறு (6) மாத காலப்பகுதிக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

ஜே பி கமலத்

*வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களப் பதில் பணிப்பாளர்*

*இலங்கை மத்திய வங்கி*